25.11.2025

OS No: 68/2013

வா.சா. 2 திரு. பாலமுருகன் த/பெ.கந்தசாமி

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. நான் சாம்பவிகா பள்ளியில் எத்தனை வருடங்களாக ஆசிரியராக பணிபுரிகிறேன் என்றால் 15.12.2000 தேதியில் இருந்து நான் அரசு வேலைக்கு செல்லும் வரை 27.03.2003 வரை பணிபுரிந்தேன். மேற்படி காலக்கட்டத்தில் சாம்பவிகா பள்ளியில் ஆசிரியராக மட்டும் பணிபுரிந்தேனா டிரஸ்ட் உறுப்பினராகவும் இருந்தேனா என்றால் ஆசிரியராகவும் டிரஸ்ட் உறுப்பினராகவும் இருந்தேன். 2003ம் வருடம் முதல் தற்போது வரை நான் அரசு பள்ளி ஆசிரியராக பணிபுரிகிறேனா என்றால் 2003 முதல் அரசு பள்ளி ஆசிரியராக பணிபுரிந்து 2025 பிப்ரவரி மாதம் பணி ஓய்வு பெற்றுள்ளேன். மேற்படி நான் சாம்பவிகா பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்த காலக்கட்டமான 2000 முதல் 2003 வரை 2 மாதங்களுக்கு ஒரு முறை டிரஸ்ட் கூட்டமானது முறையாக நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. மேற்படி கூட்டங்களில் நான் கலந்து கொண்டேனா என்றால் கலந்து கொண்டேன். மேற்படி கூட்டங்களுக்கு வருகை தருபவர்களிடம் வருகை பதிவேட்டில் கையொப்பம் பெறுவது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி காலக்கட்டத்தில் எத்தனை கூட்டங்களில் நான் கலந்து கொண்டு கையெழுத்து செய்துள்ளேன் என்றால் எத்தனை கூட்டங்கள் என்று தற்போது தெரியவில்லை. அரசு பள்ளிக்கு பணிபுரிய சென்ற பிறகு எத்தனை முறை 2012 வரை சாம்பவிகா அறக்கட்டளைக்கு சென்று வந்துள்ளேன் என்றால் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நேரம் கிடைக்கும் சமயங்களில் சென்று வந்தேன். அறக்கட்டளை உறுப்பினர்கள் கூட்டமானது ராகினிப்பட்டியில் உள்ள சாம்பவிகா மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் என்றால் சரிதான். 2012 முதல் தற்போது வரை சாம்பவிகா மேல்நிலைப்பள்ளியில் அறக்கட்டளை உறுப்பினர் கூட்டமானது நடைபெற்று வருகிறது என்றால் இல்லை. 2012 முதல் 2025 வரை சாம்பவிகா மேல்நிலைப்பள்ளிக்கு எத்தனை முறை சென்று வந்துள்ளேன் என்றால் எத்தனை முறை என்று தெரியவில்லை எப்பொழுது ஆவது சனி, ஞாயிற்று கிழமைகளில் செல்வது உண்டு, மேற்படி சென்று வந்ததும் 2014ம் வருடம் வரை மட்டுமே ஆகும். 2014 பிறகு நான் மேற்படி பள்ளிக்கு போக முடியவில்லை. 2000 முதல் 2003ம் வருடம் வரை டிரஸ்ட் கூட்டம் நடைபெறுவது குறித்து தகவலானது

வாய்மொழியாக எங்களுக்கு சொல்லப்படும் என்றால் சரியல்ல. பதிவு தபால் மூலமாக சொல்லப்படும். 2003 முதல் 2012 வரையிலான காலக்கட்டத்திலும் பதிவு தபால் மூலமாக தான் டிரஸ்ட் கூட்டம் குறித்து சொல்லப்பட்டது. எனக்கு அனுப்பப்பட்ட பதிவு தபால் கடிதம் ஏதேனும் நான் வைத்துள்ளேனா என்றால் என்னிடம் இல்லை. டிரஸ்ட் கூட்டத்திற்கு வருகை தருவதற்கு பதிவு தபால் மூலமாக விவரம் சொல்லப்படுவது இல்லை என்றும், வாய்மொழியாக தான் சொல்லப்படும் என்றும், அதனால் தான் எனக்கு அனுப்பியதாக சொல்லும் பதிவு தபால் என்னிடம் இல்லை என சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு 10 நாட்கள் அவகாசம் கொடுக்கம் பட்சத்தில் எனக்கு அனுப்பிய பதிவு தபால்களை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்த இயலுமா என்றால் 3 வீடுகள் மாறிவிட்டேன் அதனால் மேற்படி தபால்களை தாக்கல் செய்ய இயலாது. 2012 முதல் 2025 வரை சாம்பவிகா அறக்கட்டளை கூட்டம் குறித்து எனக்கு பதிவு தபால் அனுப்பி வைக்கப்பட்டதா என்றால் 2013ம் வருடம் அவ்வாறு தபால் எனக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மேற்படி பதிவு தபாலை யார் அனுப்பியது என்றால் ஏ.எம். சேகர் அனுப்பினார். சாம்பவிகா அறக்கட்டளையின் உறுப்பினர் எத்தனை கூட்டங்களுக்கு செல்லாமல் இருந்தால் அவர் உறுப்பினர் பதவில் இருந்து நீக்கப்படுவார் என்றால் அவ்வாறு எந்த நடைமுறையும் இல்லை. சாம்பவிகா கல்வி அறக்கட்டளையின் நோக்கம் ஏழை மாணவர்களுக்கு நல்ல கல்வி வழங்குவது என்றால் சரிதான். 2013 முதல் 2025 வருடம் வரை ஏ.எம். சேகர் மற்றும் ராணி ஆகியோர் மேற்படி சாம்பவிகா பள்ளிகள் மற்றும் அறக்கட்டளை நல்ல முறையில் நிர்வாக பராமரிப்பு செய்து வருகிறார்கள் என்றால் எங்களிடம் கொடுத்து இருந்தாலும் நாங்களும் நல்ல முறையில் நிர்வாக பராமரிப்பு செய்து வந்திருப்போம். எங்களுக்கு நிர்வாக பராமரிப்பு கொடுங்கள் என்று சட்ட நடவடிக்கை எடுத்தீர்களா என்றால் எடுக்கவில்லை, கடிதம் மட்டும் அனுப்பியுள்ளோம் என சாட்சியம் அளித்து பிறகு மதுரை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து இருந்ததாக சாட்சியம் அளிக்கிறார். கடிதம் அனுப்பியது குறித்தும் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ததாக சொல்வது குறித்தும் எடுத்துக்காட்டிட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. சாம்பவிகா அறக்கட்டளை ஆரம்பித்த போது 6 உறுப்பினர்கள் அவர்களுக்கான பங்கு தொகை செலுத்திதான் ஆரம்பிக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி 6 உறுப்பினர்களில் எத்தனை பேர் அறக்கட்டளையில் இருந்து வெளியேறினார்கள் எத்தனை பேர் அறக்கட்டளைக்கு உறுப்பினராக சேர்ந்தார்கள் என்றால்

2006 ம் வருடம் 3 பேர் உறுப்பினர்களில் இருந்த வெளியேறினார்கள் அதற்காக சேகர், ராணி, பாரதிதாசன் ஆகியோர் உறுப்பினர்களாக சேர்ந்தார்கள். மேற்படி ராணி, பாரதிதாசன் ஆகியோர் ஆர்.எம். காசி என்பவரின் மகள், மகன் என்றால் சரிதான். சேகர் மருமகன் என்றால் சரிதான். 2006 முதல் 2013ம் வருடம் வரை சாம்பவிகா மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் அறக்கட்டளையை யார் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செய்து வந்தார்கள் என்றால் ஆர்.எம்.காசி செய்து வந்தார். 2000 முதல் 2006ம் வருடம் வரை சாம்பவிகா மேல்நிலைப்பள்ளிகள் மற்றும் அறக்கட்டளையை யார் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செய்து வந்தார்கள் என்றால் பாலமுருகன் ஆகிய நான், ஆர்.எம்.காசி, முத்துக்கண்ணன், சரவணன், கணேசன், மலர்வேணி ஆகியோர் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செய்து வந்தோம். 2000 முதல் 2012ம் வருடம் வரை நாங்கள் நிர்வாகம் மற்றும் பராமரிப்பு செய்து வந்தோம் என்று காட்டிட ஆவணங்கள் ஏதேனும் தாவா வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. 2000 முதல் 2012ம் வருடம் வரை மேற்படி பள்ளிகளுக்கு அங்கீகார உத்தரவை தமிழக அரசிடம் இருந்து யார் வாங்கினார்கள் என்றால் மேற்சொன்ன 6 டிரஸ்ட் உறுப்பினர்கள் வாங்கினார்கள். மேற்படி சங்கதிக்கு ஆதரவாக எந்த ஆவணமும் தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2013 முதல் 2025 வருடம் வரை ஏ.எம்.சேகர் மற்றும் ராணி ஆகியோர் தான் மேற்படி பள்ளிகளுக்கு அரசிடம் அங்கீகாரம் பெற்றனர் என்றால் மேற்படி நபர்கள் அறக்கட்டளையின் செயலாளராக இருந்ததால் செயலாளர் என்ற அடிப்படையில் மேற்படி காலத்திற்க்கான அங்கீகாரத்தை புதுப்பித்தவர்கள் ஆவார். 2000 முதல் 2006 வரை மேற்படி பள்ளிக்கான வருமான வரி கணக்குகளை வருமான வரித்துறையில் சமர்பித்தார்களா என்றால் இல்லை. மேற்படி காலமானது பள்ளி ஆரம்பித்த காலம் என்பதால் வருவாய் இல்லை அதனால் காட்டவில்லை. 2000ம் வருடத்தில் 11ம் வகுப்பிற்கு 100 பேரும் 12ம் வகுப்பிற்கு 100 பேரும் மாணவர்களாக இருந்தார்களா என்றால் சரியல்ல. 2000ம் வருடத்தில் 11ம் வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது அப்போது 40 மாணவர்கள் இருந்தார்கள், மேற்படி 40 மாணவர்கள் 2001ம் வருடம் 12ம் வகுப்பிற்கு மாணவர்களாக இருந்தார்கள். 2006ம் வருட காலத்தில் மேற்படி பள்ளியில் உள்ள அனைத்து வகுப்புகளுக்குமான மாணவர்களின் எண்ணிக்கை எவ்வளவு இருந்தது என்றால் 2000 மாணவர்கள் இருந்தார்கள். 2000ம் வருடத்தில் 11, 12ம் வகுப்புகள் மட்டும் துவக்கப்பட்டு நடைபெற்றது 2001ம் வருடம் 6 முதல் 10ம் வகுப்பு வரையும், 2002ம் வருடம் LKG முதல் 5ம்

வகுப்புகள் வரை ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றது. 2000 முதல் 2006 ம் வருடம் காலக்கட்டத்தில் வருடத்திற்கு எவ்வளவு வருமானம் கிடைத்தததது என்றால் அந்த விவரம் சரியாக தெரியவில்லை. மேற்படி காலக்கட்டத்தில் வருமானம் அதிகமாக கிடைத்தது என்றும் அதனை அறக்கட்டளையின் உறுப்பினர்களாக இருந்த நாங்கள் எங்களுக்குள் பகிர்ந்து எடுத்து கொண்டோம் என்றும் அதனால் தான் வருவாய் விவரம் சரியாக தெரியவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. 2006 முதல் 2012 வருடம் வரை வருமான வரி செலுத்தியுள்ளோமா என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்படி காலக்கட்டத்திற்கு வருமான வரி செலுத்தியுள்ளோமா என்பது குறித்து உரிய அலுவலகத்திற்கு அழைப்பாணை அனுப்பி விசாரிக்கும் பட்சத்தில் விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். 2013 முதல் 2025 வருடம் வரை ஏ.எம்.சேகரும், ராணியும் வருமான வரி செலுத்தி வருகிறார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. டிரஸ்ட் உறுப்பினர் அரசு பணியில் இருந்தால் அவரது டிரஸ்ட் உறுப்பினர் பதவி நீக்கப்படும் என்ற விதிமுறை உள்ளதா என்றால் அவ்வாறு எதுவும் இல்லை. ஆர்.எம்.காசி யின் மகன் மாறன் மேற்படி பள்ளியின் தலைமை ஆசிரியராக பணிபுரிந்தாரா என்றால் 2000 முதல் 2006ம் வருடம் வரை PGஆசிரியராகவும், 2007 முதல் 2012-ல் அவர் இறக்கும் வரை தலைமை ஆசிரியராகவும் பணிபுரிந்தார். மேற்படி காலக்கட்டத்தில் ஆர்.எம்.காசியின் மகன் மாறன் பள்ளி, அறக்கட்டளை ஆகியவற்றின் நிர்வாகம் மற்றும் பராமரிப்பில் தலையீடு செய்தாரா என்றால் இல்லை. அறக்கட்டளை உறுப்பினர்களாக சேர்க்கப்பட்ட நபர்கள் அவர்களுடைய பங்கு தொகையை செலுத்தி தான் உறுப்பினர்களாக சேர்ந்தார்கள் என்றால் சரிதான். எங்களுக்கும் மற்றும் சேகர், ராணி ஆகியோர்க்கும் இடையே முதலில் எப்போது எதற்காக பிரச்சணை வந்தது என்றால் 2013ம் வருடம் மலர்வேணி மேற்படி அறக்கட்டளையின்பொருளாளராக இருந்தார். அப்போது அவரிடம் எழுதப்படாத காசோலையின் கையெழுத்து போடும் படி சேகர் கேட்டார். அந்த விவரத்தை மலர்வேணி என்னிடம் சொல்ல அது குறித்து நான் சேகரிடம் கேட்டேன் அப்போது தான் எங்களுக்குள் பிரச்சணை ஏற்பட்டது. மேற்படி விவரத்தை எனது பிராதிலோ எனது நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. தாவா வழக்கில் முதலில் சேகர், ராணி ஆகியோருடன் நானும், மலர்வேணியும் பிரதிவாதியாக இருந்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளோம் என்றும், அதன் பிறகு மனுவின் பேரில் வாதி காசியுடன் வாதிகளாக

சேர்ந்துள்ளோம் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரையில் உள்ள எனது கையெழுத்து ஆங்கிலத்திலும் சாட்சிய வாக்குமூலத்தில் எனது கையெழுத்து தமிழில் உள்ளது என்றால் சரிதான். இது போல் எனது கையெழுத்துக்களை எந்த ஆவணங்களில் மாற்றி செய்துள்ளேன் என்றால் மாற்றி ஏதேனும் செய்யவில்லை, பெரும்பாலும் தமிழில் கையெழுத்து செய்வேன்.

குறுக்குவிசாரணை காலஅவகாசம் கோரி வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.11.25 17:35:53 +0530